# செய்தி மடல்

**NEWSLETTER - JULY 2009**

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ் Tamil Study Centre, Homebush Inc.
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au


## பேச்சுப்போட்டி பரிசளிப்பு தினம் - 18.07.2009

இம்முறை இடம்பெற்ற பேச்சுப்போட்டியில் அதிக மாணவர்கள் மிக ஆர்வத்துடன் பங்குபற்றி பரிசில்களைப் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கான பரிசில்கள் எதிர்வரும் 18ம் திகதி ஜுலை மாதம் பி.ப 2:00 மணிக்கு வழங்கப்படும்.

## இரண்டாம் தவணை நிறைவு நாள் - 18.07.2009
## பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு

தவிர்க்க முடியாத காரணங்களால் கல்வி நிலையம் 23.05.2009 அன்று மூடப்பட்டது யாவரும் அறிந்ததே. ஆதலால் இரண்டாம் தவணை விடுமுறை நாள் 18.07.2009 க்கு மாற்றப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம். இத்தினத்தன்று பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு இடம்பெறும். அத்துடன் மாணவர்களின் அரையாண்டுக்கான அறிக்கையும் வழங்கப்படும்.

## Drawing and Writing Competition 2009
### NSW Federation of Community Language Schools

வழமைபோல் இம்முறையும் NSW Federation of Community Language Schools வரைதல் மற்றும் கட்டுரை எழுதுதல் போட்டிகளுக்கான தலைப்புகளை (Theme) தந்துள்ளார்கள்:

**Picture Competition**: *“How we celebrate a special community event in Australia”*

**Essay Writing Competition**: *“A celebration from my community and how it enhances our multicultural Australia”* இதற்கான முழுவிபரங்களையும் இத்துடன் இணைத்துள்ளோம். உங்களது ஆக்கங்களை 01.08.2009 அன்று உங்கள் வகுப்பு ஆசிரியரிடமோ அல்லது செயலாளரிடமோ கையளிக்கவும். தயவுசெய்து உங்கள் விபரங்களையும், போட்டி விபரங்களையும் இணைக்கப்பட்ட விபரக்கொத்தில் குறிப்பிட்டது போல் தெளிவாக எழுதவும்.

## அமைச்சர் விருது தெரிவு

எமது கல்வி நிலையத்தில் சிறந்தமாணவர் விருதிற்காக தெரிவுசெய்யப்பட்ட செல்வன் சிவாயன் சரவணபவானந்தன் (மேற்பிரிவு), செல்வன் கண்ணன் சுபபிரியன் (கீழ்ப்பிரிவு) ஆகிய இருவரும், 2009ம் ஆண்டு அமைச்சர் விருதின் தெரிவிற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். அமைச்சர் விருது வைபவம் 04.09.2009 அன்று University of New South Wales இல் இடம்பெறவுள்ளது.

## பாடற்குழு

எமது கல்வி நிலைய பாடல் குழுவினர் அண்மையில் இடம்பெற்ற சிட்னி பல்கலைக் கழகமும், நியூசவுத்வேல்ஸ் பல்கலைக் கழகமும் இணைந்து வழங்கிய “நிலவொளி” கலாசார நிகழ்ச்சியிலும், சிட்னி தமிழ் அறிவகம் நடாத்திய “வசந்தமாலை”, “கொடிதினம்” நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றி தமிழ்மொழி வாழ்த்தினையும், தேசிய கீதத்தினையும் பாடினார்கள்.

## எழுத்தாளர் விழா 2009 – மெல்பேன்

அண்மையில் Melbourne இல் இடம்பெற்ற எழுத்தாளர் விழாவில் எமது கல்விநிலைய அதிபர் திரு திருநந்தகுமார் தலைமையில் எமது கல்வி நிலைய உயர்வகுப்பு மாணவர்களான செல்வன் ஜெனோசன் தர்மகுலசிங்கம், செல்வன் அஸ்வின் சண்முகலிங்கம் ஆகியோர் பங்குபற்றி “மாணவ ஆசிரியரின் கற்பித்தல் அனுபவம்”, “எழுத்தாளர்கள்” எனும் தலைப்புக்களில் உரையாற்றி அனைத்து தமிழ் நெஞ்சங்களின் பாராட்டையும் பெற்றார்கள். இவர்கள் மாணவஉதவி ஆசிரியர்களாக ஆண்டு 3 இல் ஆசிரியர்களுக்கு உதவிபுரிந்து வருவது குறிப்பிடத்தக்கது. இதனால் ஆசிரியர்கள் மாணவர்களை கவனிப்பதில் அதிகநேரம் எடுப்பதுடன், படிப்பித்தல் தரமும் மேலும் உயர்ந்துள்ளது எனலாம். இவர்களுக்கு எமது கல்வி நிலையம் சார்பில் பாராட்டுகள்.

## கொடிதினம் 2009 – சிட்னி தமிழ் அறிவகம்

சிட்னி தமிழ் அறிவகம், யாழ் பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட தினத்தை நினைவு கூர்ந்து நடாத்திய கொடிதின நிகழ்வில் எமது கல்விநிலைய மாணவர்களான செல்வன் தணிகைவாசன் இரட்ணலிங்கம், செல்வி அபிராமி திருநந்தகுமார் ஆகியோர் யாழ் பொது நூலகம் பற்றி உரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் மேலும் எமது கல்விநிலைய மாணவர்களின் “கற்றதும் பெற்றதும்” தலைப்பிலான கருந்தரங்கம் ஒன்று ஆசிரியர் திரு ச தேவராசா தலைமையில் இடம்பெற்றது. இதில் செல்வன் பிரவணன் சிவகுமாரன், செல்வன் சுஜீவன் ரங்கசுதன், செல்வி ஸ்ரீபைரவி மனோகரன், செல்வன் ஜெனோசன் தர்மகுலசிங்கம், செல்வன் நிரோசன் ஜோன் பீட்டர், செல்வன் அஸ்வின் சண்முகலிங்கம், செல்வி குபேனி ராஜ்குமார், செல்வி அழகு அண்ணாமலை, செல்வன் வாசன் சிவானந்தா, செல்வி அர்ச்சனா சந்திரதாஸ் ஆகியோர்

பங்குபற்றி சபையினரின் பாராட்டைப்பெற்றார்கள். இக்கருந்தரங்கில் நிறைவுரை ஆற்றிய ஆசிரியர் திரு தேவராசா அவர்கள், “மாணவர்களின் பேச்சாற்றல், உச்சரிப்பு, கருத்தை வெளிப்படுத்திய விதம் என்பன மிகவும் பாராட்டத்தக்கது” என சபையினரின் பலத்தகரகோசத்திற்கிடையே விதந்து போற்றினார்.

மேலும் எமது கல்விநிலைய மாணவர்கள் அண்மையில் **Burwood Council** ஆதரவில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் “Inter-generational Understanding through Creative Activities” எனும் தலைப்பில் கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றி தமது தமிழ் மொழித்திறனை வெளிப்படுத்தினார்கள்.

இவ்வாறு கலந்துரையாடல், கருந்தரங்கம், மேடைப்பேச்சு, பாடல்குழு என்பனவற்றில் எமது கல்விநிலைய மாணவர்களின் மேலதிக பங்களிப்பு, அவர்களது மேடைக் கூச்சத்தினை அகற்றுவது மட்டுமல்லாது, பேச்சாற்றல், சொல்வன்மை என்பவற்றை கூட்டுவதுடன், சமுதாயத்தில் அவர்களை முன்னிலைக்கு கொண்டுவரவும் உதவுகின்றது. இதனால் இவர்கள் தமிழ் மொழியை விரும்பிப் படிப்பதற்கும், அதன் பயன்களைப் பெறுவதற்கும் உதவியாக இருக்கின்றது எனலாம்.

மாணவர்களின் இச்சொற்பொழிவுகளை விரைவில் எமது இணையத் தளத்தில் வெளியிடவுள்ளோம்.

## பாடசாலைக் கட்டணம்

தமிழ்க் கல்வி நிலையத்தின் அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு அரசாங்கம் தரும் பணத்தை விட அதிகமாகத் தேவைப் படுவதால், பெற்றோர்கள் தயவு செய்து பாடசாலைக் கட்டணத்தை முன்கூட்டியே செலுத்துமாறு நிர்வாகக் குழுவினர் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

## Disco – Homebush Public School

3ம் திகதி ஜுலை மாதம் நடைபெற்ற Disco நிகழ்ச்சிக்கு, எமது கல்விநிலையம் வழமைபோல் இலங்கை, இந்திய உணவுகளை விற்பனை செய்து அதிக நிதியை திரட்டிக்கொடுத்துள்ளது. உணவு விற்பனைக்கு எமக்கு உதவிய அனைவருக்கும், தமிழ்க் கல்வி நிலையம் நன்றியைத் தெரிவிக்கின்றது.

## ஞாயிறு தமிழ்ப் பாடசாலை

பல்கலைக் கழகங்களில் படிக்கும் மாணவர்களுக்கும், பாடசாலைப் படிப்பை முடித்தவர்களுக்கும், மற்றும் வளர்ந்தவர்களுக்கும், ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணி தொடக்கம் 11 மணிவரை தமிழ்ப் பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது. இதனால் இளைஞர்கள் தமிழை கற்பதற்கு மிகவும் வசதியாக உள்ளது. மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**இரண்டாம் தவணை நிறைவு – 18.07.2009**
**மூன்றாம் தவணை ஆரம்பம் – 01.08.2009**

## முக்கிய தினங்கள்

01.08.09 – மூன்றாம் தவணை ஆரம்பம்
08.08.09 – கேட்டுக்கிரகித்தல் பரீட்சை 2
29.08.09 – உரையாடல் பரீட்சை 2
12.09.09 – தமிழ் அறிவுப் போட்டி (Pre – Y5)
19.09.09 – தமிழ் அறிவுப் போட்டி (Y6 – Y11)
26.09.09 – வாணி விழா 2009
03.10.09 – தமிழ்அறிவுப்போட்டி பரிசளிப்பு தினம்
03.10.09 – 3ம் தவணை நிறைவு நாள்

## இணையத்தளம்

எமது கல்வி நிலைய இணையத்தளம் multimedia வசதிகளைக் கொண்ட ஒருஇணையத்தளமாக வலுப்பெற்றுள்ளது. இதனால் நாம் மாணவர்களின் தரமான ஆக்கங்களை அனுமதியுடன் video, audio வடிவத்திலும் உங்களுக்கு தர இருக்கின்றோம்.

Our Web Address
**www.tsch.org.au**
Email
**info@tsch.org.au**